செ.வெ.எண்: 26/2020 நாள்: 27.05.2020

## *திருப்பூர் மாவட்டம்.*

# தென்மேற்கு பருவமழை-2020 தொடர்பான மேற்கொள்ளப்படவேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்த அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில் இன்று (27.05.2020), தென்மேற்கு பருவமழை-2020 தொடர்பான மேற்கொள்ளப்படவேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்த அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

***இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில்,***

01.06.2020 முதல் திருப்பூர் மாவட்டத்தில் 24X7 மணி நேரமும் செயல்படும் விதமாக வட்டாட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்களில் கட்டுப்பாட்டு அறை செயல்பட வேண்டும். மேலும், வெள்ளம் சம்பந்தமாக பெறப்படும் தகவல்களை உடனுக்குடன் உயர் அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படல் வேண்டும்.

**வருவாய்த்துறை மற்றும் ஊரக வளர்ச்சி துறையினர்** தென்மேற்கு பருவ மழையின்போது ஏற்படும் அனைத்து இன்னல்களையும், இழப்புகளையும் எதிர்கொள்ளும் விதமாக, மாவட்டத்தில் உள்ள வருவாய் கோட்டாட்சியர், வட்டாட்சியர்கள் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் தங்களது கட்டுப்பாட்டில் உள்ள VHF/HF, தொலைபேசி, வாகனங்கள் மற்றும் வயர்லஸ் கருவிகள் அனைத்தும் இயங்கக் கூடிய நிலையில் உள்ளதை ஊர்ஜிதம் செய்திடல் வேண்டும். கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் 01.06.2020 முதல் வெள்ள கட்டுப்பாட்டு அறை 24X7 நேரமும் உரிய பணியாளர்களுடன் இயங்க வேண்டும் வெள்ளசேதம், கால்நடை இறப்பு போன்ற பேரிடர்களை உடனுக்குடன் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள பேரிடர் மேலாண்மை பிரிவிற்கு உடனுக்குடன் தெரிவிப்பதோடு மின்அஞ்சல் முகவரிக்கும் [E-mail id: collrtupddm@gmail.com] அறிக்கை அனுப்ப வேண்டும். மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள 1077 என்ற Toll Free எண்ணிற்கு சார்நிலை அலுவலர்கள் வெள்ளம் பற்றி பெறப்படும் செய்திகளையும், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் விபரங்களையும் உடனுக்குடன் தெரிவிக்க வேண்டும். தினசரி மழையளவு பற்றிய விவரங்கள் https://tnsdma.tn.gov.in இணையதளத்தில் பதிவு செய்து கண்காணிக்கப்பட்டுவருவதால் மழை அளவு குறித்த விபரங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறைக்கு காலை 7.00 மணி மற்றும் மாலை 4.00 மணிக்குள்ளும் தவறாது தெரிவித்திடல் வேண்டும். மேலும் வெள்ளச்சேதம் பற்றிய தினசரி அறிக்கையினை உரிய படிவத்தில் அனுப்பிவைப்பதோடு அவ்வாறு அறிக்கை அனுப்பிடும் நேர்வுகளில், உரிய நிவாரணம் வழங்கலாமா அல்லது வேண்டாமா என்ற குறிப்பான அறிக்கையினை அனுப்பிவைக்க வேண்டும். மேற்படி பணிகளை தலைமையிடத்து துணை வட்டாட்சியர் பொறுப்பில் செயல்படுத்த வேண்டும். உரிய நிவாரணம்

வழங்கப்படும் இனங்களில் அரசாணை எண்.380 மற்றும் 246-ல் வகுக்கப்பட்ட விதிமுறைகளை பின்பற்றி 24 மணிநேரத்திற்குள் வழங்கி அதன் விபரத்தினை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு புகைப்படத்துடன் தெரிவிக்க வேண்டும். _வருவாய் வட்டாட்சியர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட வட்டங்களில் உள்ள கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கிராம உதவியாளர்கள் தங்களது கிராமத்தில் தங்கியிருந்து வெள்ளச் சேதம் பற்றிய அறிக்கைகளை உடனுக்குடன் வட்டாட்சியருக்கு தெரிவிக்க உரிய அறிவுரைகள் வழங்க வேண்டும். மேலும், நீர்நிலை ஆதாரங்களின் நீர்மட்டத்தினை உன்னிப்பாக கண்காணிப்பதோடு நீர்வழிப் புறம்போக்குகளில் உள்ள அனைத்து ஆக்கிரமிப்புகளையும் உடன் அகற்றிடல் வேண்டும். வட்டாட்சியர்களும், கோட்டாட்சியர்களும் தங்களது பகுதிகளில் உள்ள பாதுகாப்பு மையங்கள் திருமண மண்டபங்கள், பள்ளிகள் மற்றும் சத்துணவுக் கூடங்களை தேர்வு செய்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நபர்களை அங்கு தங்க வைக்க ஏதுவாக அவர்களுக்கு உரிய அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய தனித்தனி குழுக்கள் அமைக்க வேண்டும். தற்போது கோவிட் 19 தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் தனிநபர் இடைவெளியை கடைப்பிடிக்கும் வண்ணம் கூடுதல் பாதுகாப்பு மையங்களை தேர்வு செய்து அது குறித்த அறிக்கையினை அனுப்பிவைக்க வேண்டும். மேலும் முதல் தகவல் அளிப்பவர்கள் (First Responders), மீட்பு அலுவலர்கள் (Rescue Teams) போன்ற குழுக்களை அமைத்து அவர்களுக்கான பிரத்யேக கூட்டம் ஒன்றை கோட்ட அலுவலர்கள் நடத்துவதோடு கோட்ட அளவில் பல்துறை (Inter Departmental Teams) அலுவலர்களைக் கொண்டும் ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்திடல் வேண்டும். மனித உயிர் இழப்பு ஏதேனும் கண்டறியப்பட்டால் அவர்களது வாரிசுதாரர் குறித்து விசாரணை மேற்கொண்டு உரிய அரசு நிவாரணம் வழங்க தாமதமின்றி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இறப்பிற்கான நிவாரண முன்மொழிவில் தேவையான விபரங்களான இறப்புச்சான்று, வாரிசுச்சான்று, வட்டாட்சியரின் விசாரணை அறிக்கை மற்றும் பரிந்துரை ஆகியவைகளை இணைத்து மாவட்ட ஆட்சியருக்கு அறிக்கை அனுப்பிடல் வேண்டும். கால்நடை இறப்பு நேர்வில், வட்டாட்சியர்கள் கால்நடை மருத்துவரின் இறப்பு மற்றும் பிரேதப் பரிசோதனை சான்றுடன் அறிக்கை அனுப்பிடவும் அரசால் அறிவிக்கப்பட்டுள்ள நிவாரணத்தொகை வழங்க நடவடிக்கை எடுக்கவும் வேண்டும். மேலும் வட்டாட்சியர்கள் பருவமழைக்காலங்களில் தங்கள் ஆளுமைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், காவல்துறை, அரசுமருத்துவர் மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் கொண்ட குழு அமைத்து பேரிடர் மேலாண்மை காலத்தில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். உடுமலை வருவாய் கோட்டாட்சியர் அமராவதி நீர் தேக்கத்தில் உள்ள படகுகள் மற்றும் நீர் மிதவைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றை இயக்குபவர்களின் கைபேசி எண்ணுடன் தனி அறிக்கை அனுப்பிட வேண்டும். நீர்நிலைப் புறம்போக்குகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும். இடி மற்றும் மின்னல் ஏற்படும் நேரங்களில் பொதுமக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளை துண்டுப் பிரசுரங்கள் வாயிலாக மக்கள் அனைவருக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

**<u>கோவிட்-19 சிறப்பு நடவடிக்கைகள்</u>**

முதல்நிலை தகவல் அளிப்பார்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு தேவையான PPE உடைகள் போதிய அளவில் இருப்பு உள்ளதை உறுதி செய்திடல் வேண்டும். பாதுகாப்பு மையங்களுக்கு பொதுமக்களை இடமாற்றம் செய்யும் நேர்வுகளில் முகக்கவசங்கள் அணிந்திருப்பதுடன் போதிய தனிநபர் இடைவெளியை தவறாமல் கடைப்பிடித்திடவும் வேண்டும். பாதிப்புக்குள்ளாகும் நபர்களுக்கு வழங்கிடுவதற்காக போதிய முகக்கவசங்களை இருப்பு வைத்திருப்பதை உறுதி செய்திடல் வேண்டும். கோவிட் -19 முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் பொருட்டு தனிநபர் இடைவெளியை பேணும் வண்ணம் கூடுதலாக பாதுகாப்பு மையங்களை கண்டறிந்து தயார் செய்திடல் வேண்டும். பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்கப்படும் பொதுமக்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொண்டு கோவிட்-19 அறிகுறிகள் ஏதும் உள்ளதா என்பதை கண்டறிந்து தொற்று பராமல் இருக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் தொற்று பரவாமல் தடுக்கும் பொருட்டு நோய்தடுப்பு மற்றும் சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் (vulnerable Area) தனிமைப்படுத்துதல் முகாம்கள் ஏதும் அமைந்திருப்பின் அதனை வேறு பகுதிகளில் மாற்றி அமைத்திட வேண்டும்.

**மாவட்ட பேரிடர் மேலாண்மை முகமை / மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்:**

**<u>தினசரி அறிக்கைகள்:</u>**

- ❖ அதிக பாதிப்பிற்குள்ளாகும் பகுதிகளில் குறித்த நேரத்தில் மாதிரி ஒத்திகைகள் நடத்தி முடிக்கப்பட்டு அறிக்கை அனுப்ப வேண்டும்.
- ❖ கிராமம்/வார்டு குழு கூட்டங்கள் நடத்தப்பட வேண்டும்.
- ❖ மொத்தம் கண்டறியப்பட்ட ஆக்கிரமிப்புகளில், அகற்றப்பட்ட ஆக்கிரமிப்புகள் விபரம், வழக்கு நிலுவையில் அல்லது நீதிமன்ற தடையுத்தரவால் அகற்ற முடியாதவை மற்றும் அகற்ற இயலக் கூடிய ஆக்கிரமிப்புகள் விபரம்.
- ❖ அரசாணை எண் 50 -ன்படி குளம், குட்டைகள் தூர்வாரப் பட்ட விபரம்.
- ❖ நிவாரண முகாம்கள் ஆய்வு செய்த விபரம் மற்றும் கொரோனோ தொற்று காரணமாக நிவாரண முகாம்களில் அதிகளவு மக்களைத் தங்க வைக்க இயலாது என்பதால் முகாம்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தி அதைக்குறித்த விபரம் தெரிவிக்க வேண்டும்.
- ❖ பொது விநியோக பொருட்கள் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளதை உறுதி செய்ய வேண்டும்.

**<u>பொதுப்பணித்துறை (நீர் வள ஆதார அமைப்பு):-</u>**

- ❖ நீர் நிலைகள் மற்றும் நீர்வழித் தடங்களை ஆக்கிரமிப்புகள் இன்றி பாதுகாக்க வேண்டும் ஆக்கிரமிப்புகள் இருப்பின் அவற்றை அகற்ற உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- ❖ ஆறுகளில் ஆக்கிரமிப்புகள் தூர்வாரி அகற்றப்பட்டு அவற்றை அசல் நிலைக்கு கொண்டு வரவேண்டும். குறிப்பாக, பாதிக்கப்படும் பகுதிகளில் (Vulnerable Areas) இதை கண்டிப்பாக செய்ய வேண்டும்.
- ❖ முக்கிய நீர்பாசன கால்வாய்கள் அனைத்தும் தூர்வாரப்பட்டு ஆக்கிரமிப்புகள் இன்றி பராமரிக்கப்பட வேண்டும்.

## கல்வித்துறை:

- தேசிய பேரிடர் மேலாண்மை முகமை (NDMA) 2016 -ல் பள்ளிகள் பாதுகாப்பு குறித்து தேசிய பேரிடர் மேலாண்மை வழி காட்டு நெறிமுறைகளை வகுத்துள்ளது.
- மாண்பமை உச்ச நீதிமன்றம் மேற்படி வழிகாட்டு நெறிமுறைகளை அப்படியே அமுல்படுத்தப்பட வேண்டும் என உத்திரவிட்டுள்ளது.
- பள்ளி கல்வித்துறை சார்பில் 27.08.2018 -ல வெளியிடப்பட்ட அரசாணை எண்.177 இல் தேசிய பேரிடர் மேலாண்மை முகமை அளித்துள்ள நெறிமுறைகளை அமுல்படுத்தும் பொருட்டு மாநில அளவிலான பள்ளிப்பாதுகாப்பு ஆலோசணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. அதன் படி அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிக் குழந்தைகளின் பாதுகாப்பிற்காக அனைத்து பள்ளிக் கூடங்களும் மாண்பமை உச்சநீதி மன்றம் வகுத்தளித்துள்ள நடைமுறைகளின் படி இருக்க வேண்டும்.
- அனைத்து பள்ளிகளும் மின் இணைப்புகள் மற்றும் மின் சாதனங்களை பழுதுபார்த்தல், திறந்த நிலை கழிவு நீர் கால் வாய்கள் மற்றும் குழிகளைசுத்தப்படுத்தி மூடுதல்.
- மரக்கிளைகளை வெட்டி அகற்றுதல்
- மாடி கூரைகளில் அடைப்பு ஏற்பட்டுள்ள நீர் போக்கிகளை சுத்தப்படுத்திவைத்தல்
- மாடிப்படிகளை சுத்தப்படுத்தி வைத்தல்.
- பலவீனமான மற்றும்  சேதமடைந்த நிலையில் உள்ள கட்டிடங்களை கண்டறிந்து அவற்றை பயன்பாட்டிலிருந்து நீக்குதல், மற்றும் மாணவர்களுக்கு பாதுகாப்பாக, சுகாதாரமாக வாழ செய்ய வேண்டியவை /செய்யக் கூடாதவை குறித்த விழிப்புணர்வை பள்ளிகள் ஏற்படுத்த வேண்டும்.

## நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சித் துறை

- வானிலை மைய அறிவிப்புகளின் பேரில் மின்சாரத் துண்டிப்பு பிரச்சினைகளை சமாளிக்கும் பொருட்டு உயர்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளை நிரப்பிவைக்க வேண்டும்.
- துப்புரவுப் பணியாளர்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்
- மின ஆக்கிகள் (Generators) வாடகைக்கு எடுக்க வேண்டியிருந்தால் அவற்றை வாடகைக்கு தரும் நிறுவனங்கள் பட்டியலை தொகுத்து அவற்றிகான தொகை நிர்ணயம் செய்து தயார் நிலையில் வைக்க வேண்டும்.
- இருக்கும் நிவாரண முகாம் களைத் தாண்டி அதிகமக்களை அப்புறப்படுத்த ஏற்படும் தேவைகளையும் கொரோனாவால் தனி மனித இடைவெளி கடைபிடிக்க வேண்டியள்ளதாலும்,தங்களது பகுதிகளில் உள்ள கல்யாண மண்டபங்கள் அல்லது இதர அமைப்புகளில் தங்கவைக்க உரிய ஏற்பாடுகளை செய்து கொள்ள வேண்டும்.

## மழைநீர் சேகரிப்பு

- தகுதியான  இடங்களில் மழைநீர் சேகரிப்பு குட்டைகள் அமைத்து மழைநீர் சேமிக்க வேண்டும். குறிப்பாக குடிநீர் ஆதாரங்கள் உள்ள இடங்களிலும், குடிநீர் பற்றாக்குறை உள்ள கிராமங்களிலும் இதை கண்டிப்பாக செய்ய வேண்டும்.

- பயன் பாட்டில் இல்லாத ஆழ்குழாய் கிணறுகளை, மழைநீர் சேகரிப்பு அமைப்புகளாக மாற்ற வேண்டும்.
- வீடுகள் மற்றும் அலுவலக கட்டிடங்களின் கூரைகளில் சேகரமாகும் மழைநீரை சேமிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மருத்துவமனைகள்**

- அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் தங்களது மருத்துவமனை பேரிடர் மேலாண்மை திட்டத்தை வரைவு செய்து அனுப்பிவைக்க வேண்டும்.
- மருத்துவமனைக்கு குறிப்பாக ICU/CCU ஆகியவற்றிக்கு தடையில்லா மின்சாரம் செல்ல போதிய PowerBackup வசதிகள் செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- போதுமான அளவு ஆக்ஸிஜன் சிலிண்டர்கள், அவசரகால மருந்துகள் உயிர்காக்கும் மருந்துகள் ஆகியவற்றை இருப்பில் வைக்க வேண்டும். மேலும் உயிர்காக்கும் கருவிகளை இயங்கும் நிலையில் பராமரிப்பதுடன், மின் ஆக்கிகளுக்கு (Generator) தேவையான டீசலையும் இருப்பு வைக்க வேண்டும்.
- மின் ஆக்கிகளை முடிந்த அளவு உயரமான பகுதிகளில் குறிப்பாக முதல் மாடியில் வைத்து பராமரிக்க வேண்டும்.
- தீதடுப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

**<u>பொது சுகாதாரம்</u>**

- அத்தியாவசியமான மற்றும் உயிர் காக்கும் மருந்துகள் இருப்பை உறுதி செய்ய வேண்டும்
- மருத்துவர்கள் வரும் நேரம் மற்றும் அவசர காலங்களில் தொடர்பு கொள்ள அவர்களின் தொடர்பு எண்களை பார்வைக்கு வைக்க வேண்டும்.
- அரசு மற்றும் தனியார் அவசர ஊர்திகளின் (Ambulances) பட்டியலை தயார் செய்து வைக்க வேண்டும்.
- அவ்வப்போது மருத்துவ முகாம்கள் நடத்தி சிறு நோய்களுக்கு சிகிக்சை அளிப்பதுடன் இங்கு சிகிச்சை அளிக்க இயலாத பெரிய நோய்களுக்கு எங்கு சென்று மருத்துவம் பார்ப்பது என்ற வழிகாட்டுதல் வழங்க வேண்டும்.
- உயர்மட்ட மற்றும் தரை தொட்டிகள், ஆழ்குழாய் கிணறுகள் ஆகியகுடிநீர் ஆதாங்களை முறையாக குளோரின் சேர்க்கப்படுகிறதா என்பதை கண்காணிக்ககுளோரினேசன் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.
- நோய் பரவலைத் தடுக்ககுளோரின் கலந்த குடிநீர் வழங்கலை உறுதி செய்ய அவசர உதவி குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். பூச்சியியல் வல்லுநர் (Entomologist) மற்றும் களப்பணியாளர்களைக் கொண்ட தொற்று பரவல் தடுப்பு குழுக்கள் அமைத்து கொசு மற்றும் லார்வா ஒழிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- தேர்வு செய்யப்பட்ட மையங்களில் உணவுப் பாதுகாப்பு அலுவலர்களை நியமனம் செய்து குடிநீர் மற்றும் உணவு சுகாதாரம் குறித்து ஆய்வுகள் செய்யப்பட வேண்டும்.

**பொதுப்பணித்துறை (கட்டிடம் மற்றும் பராமரிப்பு):-**

அரசுக் கட்டிடங்கள், பள்ளிக் கட்டிடங்கள், சத்துணவுக் கூடங்கள்ஆகியவைகளை தணிக்கை செய்து மழைக்காலங்களில் பாதிப்பு ஏற்படுமா என்பதனை கண்டறிந்து உடன் மராமரத்துப்பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

**தோட்டக்கலை மற்றும் வேளாண் துறை:-**

பெருமழை காலங்களில் தோட்டக்கலை மற்றும் விவசாயப் பயிர்களுக்கு ஏற்படும் சேதங்களை வருவாய்த்துறையினருடன் இணைந்து புலத்தணிக்கை மேற்கொண்டு சேத அறிக்கையினை தெளிவாகவும், விபரமாகவும், கிராம வாரியாக புல எண்கள் குறிப்பிட்டு கிராம கணக்குகளுடன் அறிக்கையினை நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் மாவட்ட ஆட்சியருக்கு தவறாது அனுப்பி வைக்க வேண்டும்.

**கால்நடைபராமரிப்பு**

- கால்நடை பாதுகாக்கும் மையங்கள் கண்டறியப்பட வேண்டும்.
- கால்நடைகளுக்கு தேவையான மருந்துகள் மற்றும் அவசியமான மருந்துகளை கால்நடை மருத்துவமனைகளில் போதுமான அளவு இருப்புவைத் திருக்க வேண்டும்.
- கால்நடை பாதுகாக்கும் மையங்களில் போதுமான அளவு- தீவனம் மற்றும் தண்ணீர் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- கால்நடைகளை ஆபத்து காலங்களில் உடனடியாக பாதுகாப்பு மையங்களுக்கு அப்புறப்படுத்த கால்நடைகளுக்கான முதல் நிலை தகவளிப்பவர்கள் பட்டியலை தயார் செய்ய வேண்டும்

**வனத்துறை:-**

வனப்பகுதிகளில் மின் மற்றும் தொலைபேசி பாதைகள் மற்றும் சாலைகளில் விழும் மரங்களை உடனடியாக அப்புறப்படுத்திடல் வேண்டும்.

**உணவு பொருள்வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை:-**

1. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக மண்டல மேலாளர் தேவையான அத்தியாவசியப் பொருட்களை கையிருப்பில் தயார் நிலையில் உள்ளதை ஊர்ஜிதம் செய்வதோடு, அனைத்து நியாய விலைக்கடைகளிலும் அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை தேவையான அளவில் கையிருப்பில் உள்ளதையும் கண்காணிக்க வேண்டும்.

2. வெள்ள பாதிப்பிற்கு ஏதேனும் நியாய விலைக்கடைகள் உள்ளாகுமா என்பதனை கண்டறிந்து அங்கிருந்து உணவுப்பொருட்களை பாதுகாப்பான இடத்திற்கு முன்கூட்டியே கொண்டு செல்ல நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

3. வாகன எரிபொருள் நிறுவனங்கள் போதுமான அளவில் எரிபொருள் இருப்பு வைத்திருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்:-**

வெள்ள நிவாரணப் பணிகளுக்காக நல்ல நிலையில் இயங்கக்கூடிய 5 பேருந்துகளை தயார் நிலையில் வைத்திருப்பதோடு வெள்ளப்பெருக்கு காலங்களில் போக்குவரத்து பாதிப்பு, மற்றும் உயிர்ச்சேதம் பற்றிய செய்திகளை தூதுவர் போன்று எடுத்துவர நடத்துநர்களுக்கு தக்க அறிவுரைகளை வழங்கிட வேண்டும்.

**காவல் துறை :**

வெள்ளபெருக்கு காலங்களில் மாவட்டத்தில் உள்ள தாழ்வான பாலங்களில் பொதுமக்கள் கடந்து செல்லா வண்ணம் உரிய பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும் தாழ்வான பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களை மீட்டு அவர்களை பாதுகாப்பு மையங்களில் தங்க வைக்க கொண்டு செல்லும் நேர்வுகளில் போக்குவரத்தினை சீர் செய்யவும் (Green Corridor Plan) பாதுகாப்பு மையங்களுக்கு உரிய காவல் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

**தீ தடுப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை :-**

1. வெள்ளச் சேதத்தின்போது மீட்பு நடவடிக்கை வாகனங்களையும், பணியாளர்களையும் தயார் நிலையில் வைத்திருப்பதோடு தண்ணீரை வெளியேற்றத் தேவைப்படும் மோட்டார் மற்றும் அனைத்து இயந்திரங்களையும் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.

2. மேலும் பேரிடர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்திட ஏதுவாக வட்டங்களில் தென்மேற்கு பருவமழை துவங்கும் முன்னரே ஓர் (Mock Drill) பயிற்சியினை செயல்படுத்திடவும், ஆதரவற்ற முதியோர் / குழந்தைகள் பாதுகாப்பு மையங்களிலும் தனி Mock Drill பயிற்சி அளித்திட வேண்டும்.

**நெடுஞ்சாலைத்துறை**

பெருமழை மற்றும் வெள்ளக் காலங்களில் போக்குவரத்து சாலைகளை கவனமாக கண்காணிப்பதோடு போக்குவரத்திற்கு தடங்கல் ஏதுமின்றி சாலைகளில் மழையினால் ஏற்படும் தடைகளையும், விழுந்த மரங்களையும் உடனுக்குடன் அகற்றிடவும் நடவடிக்கை எடுப்பதோடு, இதற்கு தேவையான உபகரணங்களான Bulldozer, Electric Saw, Tree Cutting Equipments ஆகியவற்றை தயார் நிலையில் வைத்திருப்பதோடு போதுமான பணியாளர்களையும் தயார் நிலையில் அமர்த்திடல் வேண்டும். மேலும், துறை கட்டுப்பாட்டில் உள்ள தனியார் கட்டுமான நிறுவனங்களின் பட்டியலினை தயார் செய்து பேரிடர் மேலாண்மை காலத்தில் அவர்களையும் துயர் துடைப்பு மற்றும் மீட்பு பணிக்கு பயன்படுத்திட வேண்டும்.

- பைப் கல்வர்ட்களை பாக்ஸ் வகையாக மாற்றி அமைக்க வேண்டும்
- தரைப்பாலங்களை தேவைப்படும் இடங்களில் உயர்மட்ட பாலங்களாக மாற்றிறயமைக்க வேண்டும்.

**தமிழ்நாடு மின் வாரியம்:-**

பருவமழை தொடங்கும் முன்பாக மாவட்டத்தில் உள்ள உயர்/ தாழ்வழுத்த மின்கம்பிகள்/ மின் கடத்திகள் மற்றும் அனைத்து மின்வழிப் பாதைகளை ஆய்வு செய்வதோடு ஒவ்வொரு துணை மின் நிலையத்திலும் ஒரு ஜெனரேட்டரை தயார் நிலையில் வைத்திடவும் மழைக்காலங்களில் மின் இணைப்பு துண்டிக்கப்படின் உடன் சீர் செய்ய போர்கால அடிப்படையில் செயல் வேண்டும்.

**கூட்டுறவு துறை :**

பருவமழைக் காலங்களில் நிவாரண மையத்தின் மேலாண்மை பொறுப்பை கூட்டுறவு துறையினர் உரிய ஏற்பாடுகளை செய்திடல் வேண்டும்.

**பி.எஸ்.என்.எல். :**

பருவமழைக் காலங்களில் தடையில்லா தொலைத்தொடர்பை உறுதி செய்யும் வகையில் போதுமான பணியாளர்களைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

**பொது**

- பாதிக்கப்படக் கூடிய பகுதிகளில் ஏற்கனவே கண்டறிந்த பகுதிகள் தவிர புதிய பகுதிகள் ஏதேனும் இருப்பின் அவற்றை குறிப்பிட வேண்டும்.
- பாதிக்கப்படக் கூடிய பகுதிகள் குறித்த வரைபடம் ஒரு வரைபடத்திற்கு மூன்று பாதிக்கப்படும் பகுதி வீதம் தயார் செய்ய வேண்டும்.
- அனைத்து சம்பந்தப்பட்ட துறைகளையும் இணைத்து மண்டல குழுக்கள் அமைக்கப்பட வேண்டும். வருவாய்த்துறை தலைமையில், காவல்துறை தீயணைப்புத்துறை, ஊரகவளர்ச்சித் துறை, கால்நடைத்துறை, வேளாண் மற்றும் தோட்டக்கலைத் துறைகள்,பொதுப்பணித் துறை ஆகியவை உறுப்பினர்களாக இணைக்கப்பட வேண்டும்.
- கிராமங்களில் துறையிடைக் குழுக்கள் அமைக்கலாம் கிராம நிர்வாக அலுவலர் தலைமையில் பஞ்சாயத்துச் செயலர், அங்கன்வாடி மற்றும் சத்துணவு அமைப்பாளர்கள் மற்றும் வனக் காவலர்களை அதில் இடம் பெறச் செய்ய வேண்டும்.

**TN-SMART :**

தமிழ்நாடு பல்வகை வானிலை அபாயங்களின் தாக்குதல் மதிப்பீடு எச்சரிக்கை மற்றும் நெருக்கடி நிலையை எதிர் கொள்ள திட்டமிடுதல் மற்றும் தொடர் நடவடிக்கைத்திட்டம் (TN-SMART) Tamil Nadu Multi Hazard impact Assessment, Alert and Emergency Response Planning and Tracking)

1) TNSMART திட்டமானது பேரிடர் மேலாண்மையின் எல்லாவித செயல்பாடுகள் அதாவது தயார் நிலை, எதிர்கொள்ளுதல், நிவாரணம் மீட்பு மற்றும் தணிப்பு செயல்பாடுகளை உள்ளடக்கிய 11 பிரிவுகளில் மேம்படுத்தப்பட்ட ஒரு தீர்மானத்தலுக்கு உதவும் திட்டமாகும்.
2) (TN-SMART) திட்டத்தின் முக்கிய சிறப்பு அம்சங்களானது பேரிடர் அபாய முன்னறிவிப்பு, அபாயங்களை செல்பேசி செயலிகள் வழியாக அனுப்புதல், துயர்கள் குறித்த செல்பேசி அழைப்புகளை பதிவு செய்தல், கண்டறிதல் மற்றும் அபாயக் குறைப்பு நடவடிக்கைகளை மதிப்பிடுதல் ஆகிய பணிகளாகும்.

3) (TN-SMART) திட்டமானது, இந்திய வானிலை மையத்தின் மழை அளவின் வானிலை முன் அறிவிப்பின் அடிப்படையில் ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ள ஆபத்து ஏற்படும் பகுதிகளில் வெள்ள அபாயத்தின் தீவிரத்தினை முந்தைய பருவ மழைக் காலங்களில் பெறப்பட்ட மழை அளவுகளைக் கொண்டும், நீர்த்தேக்கங்கள், நீர்நிலைத் தொட்டிகளில் உள்ள நீர் மட்டத்தின் நிலையைக் கொண்டும் மதிப்பிடுகிறது.
4) மேலும், மதிப்பிடப்பட்ட அபாயத்தினை செல்பேசி செயலிகள் வழியாக களப்பணியில் செயற்பாட்டில் உள்ளவர்களுக்கு எச்சரிக்கை செய்து தாழ்வான பகுதியில் வசிக்கும் பொதுமக்களுக்கு உரிய காலத்தில் தெரிவித்து வெளியேற்றி பாதுகாப்பான தங்கும் இடங்களுக்கு அனுப்புவதின் மூலம் வெள்ளப் பெருக்கின் தீவிரத்தன்மையினால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்திட பொதுமக்களைத் தயார் செய்கிறது.
5) (TN-SMART) அலைபேசி செயலியானது தணித்தன்மை கொண்ட எச்சரிக்கை மணித்திட்டத்தைக் கொண்டுள்ளது. மேற்படி எச்சரிக்கை மணியானது அலைபேசி ஒலியற்ற நிலையில் இருப்பினும் (Silent Mode) சம்பந்தப்பட்ட அலைபேசி பயனாளர், முன் அறிவிப்பு எச்சரிக்கையினை செயலியில் பார்வையிட்டு, உரிய நேரத்தில் முன்னெச்சரிக்கை தகவலை பொதுமக்களுக்குத் தெரிவித்து உயிரிழப்புகளின் எண்ணிக்கை குறைத்தும் வாழ்க்கையை அச்சுறுத்தும் ஆழில்பேரலை பேரிடர் (சுனாமி) காலங்களின் போதும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்வரை ஒலித்துக்கொண்டே இருக்கும் வகையில் செயலியில் உள்ளது.
6) பேரிடர் தொடர்பான செயல்பாடுகளில் ஈடுபாடுள்ள அனைத்து அலுவலர்களும் (TN-SMART) செயலியை அலைபேசியில் பதிவிறக்கம் செய்திட வேண்டும். மேலும் பொதுமக்களுக்கும் தெரிவித்து அலைபேசியில் பதிவிறக்கம் செய்து பயன்படுத்திக் கொள்ளுமாறு செய்திட வேண்டும்.

மேலும், அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து தென்மேற்கு பருவமழை முன்னேற்பாடு பணிகளை முழுமையாக மேற்கொள்ள வேண்டுமெனவும் மற்றும் நடைபெற்று வரும் குடிமராமத்துப்பணிகளையும் விரைவாக முடித்திட வேண்டுமென அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர்.ஆர்.சுகுமார், தாராபுரம் சார் ஆட்சியர் திரு.பவன்குமார் இ.ஆ.ப., வருவாய் கோட்டாட்சியர்கள் திருமதி.கவிதா (திருப்பூர்), திரு.ரவிக்குமார் ( உடுமலைப்பேட்டை), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.சாகுல்ஹமீது , துணை ஆட்சியர் பயிற்சி திருமதி.விஷ்ணுவர்தினி, உள்ளிட்ட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**